2017 ஜூலை 14]

208—

வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம்

***15610—திரு. சி.வி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பர்கூர் தொகுதி, பர்கூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பர்கூர் தொகுதி, பர்கூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசாணை நிலை எண் 125, வருவாய்த் துறை, நாள் 21–4–2017–ன்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நெடுஞ்சாலைத் துறையிடமிருந்து தடையில்லாச் சான்றிதழ் வரப் பெறப்பட்டவுடன், கட்டடம் கட்டும் பணிகள் துவங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. சி.வி. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்' என்ற உயர்ந்த எண்ணத்தோடு, தமிழ்நாட்டு மக்கள் யாரிடமும், எதற்காகவும் கை ஏந்தக் கூடாது என்பதற்காக அவர்களின் தேவைகளை உணர்ந்து நிறைவேற்றித் தந்து, வங்கக் கடலோரம் சந்தனப் பேழையில், வங்கக் கடல் அலைகள் தாலாட்ட, மீளாத் துயில் கொண்டு உறங்கும் தங்கத் தாய், தெய்வமாகிவிட்ட அன்புத் தாய் மாண்புமிகு அம்மா அவர்களின் மலர்த் திருவடிகளில் என் சிரம் தாழ்த்தி வணங்குகிறேன்.*

அமைதி, வளம், வளர்ச்சி என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழியில் அடக்கமாய், அமைதியின் திருவுருவாய், எந்த சலசலப்புக்கும் அஞ்சாமல், வளமான தமிழகத்தை உருவாக்க, 100 நாட்களில் யாரும் எண்ணிப்பார்க்க

முடியாத வளர்ச்சித் திட்டங்களை தமிழ்நாட்டு மக்களுக்கு அள்ளித் தந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பதிலுக்கு எனது நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பர்கூர் வருவாய் வட்டத்தை, 2011–2014 ஆம் ஆண்டு உருவாக்கினார்கள். அந்த வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான பயணியர் மாளிகையில் செயல்பட்டு வருகின்றது. எனவே, அந்தப் புதிய வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு விரைவில் நெடுஞ்சாலைத் துறையின் அனுமதியைப் பெற்று, கட்டடத்தைக் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, மேலும், அதை எப்போது கட்டி முடிப்பார்கள் என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–55

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசுதான் புதிய பர்கூர் வட்டத்தை அரசாணை (நிலை) எண் 319, வருவாய்த் துறை, நாள் 31–8–2011–ன்படி மக்களின் நலன் கருதி உருவாக்கித் தந்துள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, தற்போது வட்டாட்சியர் அலுவலகம் பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டிலே உள்ள ஆய்வு மாளிகையில் தற்காலிகமாக இயங்கி வருகிறது. தற்போது பர்கூர் வட்டாட்சியர் அலுவலகம் இயங்கிவரும் பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள ஆய்வு மாளிகையின் அருகிலுள்ள பர்கூர் கிராம புல எண் 532/1

2017 ஜூலை 14]

விஸ்தீரணம், 1.74.5 எக்டேர் காலி நிலம் பயணியர் விடுதி என வகைப்படுத்தப்பட்டு, நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டிலே இருந்து வருகின்ற இடத்திலே பொது மக்களின் நலன் கருதி, புதிய வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நிரந்தரமாக புதிய கட்டடம் கட்ட மாவட்ட நிருவாகத்தால் முடிவு செய்யப்பட்டு, மேற்படி இடத்தில் வட்டாட்சியர் அலுவலகம் கட்ட தடையின்மைச் சான்று வழங்க சென்னை, நெடுஞ்சாலைத் துறையின் தலைமைப் பொறியாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி கடிதத்திலே, மேற்படி புலத்தில் 0.44.0 எக்டேர் நிலத்தை நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்கி வைத்துக்கொண்டு, மீதமுள்ள 1.30 எக்டேர் நிலத்தை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட ஒதுக்கீடு செய்யலாம் என சேலம், நெடுஞ்சாலைத் துறையின் சிறப்புப் பொறியாளர் சென்னை, நெடுஞ்சாலைத் துறையின் தலைமைப் பொறியாளருக்குப் பரிந்துரை செய்து, கடிதம் அனுப்பப்பட்டு, கோப்பு நடவடிக்கையில் உள்ளது. ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, புதிய வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்கு நிருவாக ஒப்புதல் மற்றும் ரூ.2,61,79,000/– நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளது. ஆகவே, இந்தக் கடிதம் அனுப்பப்பட்டு அதற்குரிய ஒப்புதல் கிடைத்த பிறகு, உடனடியாகக் கட்டடம் கட்டுவதற்கு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. இராஜேந்திரன் அவர்கள்.

திரு. சி.வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டாட்சியர் அலுவலகத்திற்கு உடனடியாக புதிய கட்டடம் கட்டித் தரப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி, அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பொதுவான கேள்வி. அரசுக்கு மிகவும் உறுதுணையாக இருக்கிற துறை, வருவாய்த் துறை.

அரசு அறிவிக்கக்கூடிய திட்டங்களுக்கு இடங்களைத் தேர்வு செய்து கொடுப்பதில் வருவாய்த் துறை முன்னிலை வகிக்கிறது. அந்தவகையிலே, நான் அரசு உறுதிமொழிக் குழுவில் உறுப்பினராக இருக்கிற காரணத்தினால், ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று குழு ஆய்வு செய்யும்போது, 1983 ஆம் ஆண்டு இதே சபையிலே கேட்ட கேள்விக்கு இதுவரை விடை கிடைக்கவில்லை. காரணம் என்னவென்று கேட்கிறபோது, இடம் தேர்வு செய்வதில் சிக்கல் என்ற விடைதான் எங்களுக்குக் கிடைக்கிறது. ஆகையினாலே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், சட்டமன்றப் பேரவையிலே சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்கிற கேள்விகளில், Primary Health Centre அல்லது மற்ற அலுவலகக் கட்டடங்களைக் கட்டுவதற்கு ஆணை பிறப்பித்தும் கட்ட முடியாத நிலையில் இருந்தால், அவற்றை ஆராய்ந்து, உடனுக்குடன் முடித்துத் தருவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுவான கேள்வி என்று சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக தகுதியுள்ள நிலங்கள் உடனடியாகத் தேர்வு செய்யப்படுகின்றன. அரசுத் துறைகளுக்கு நில மாற்றம், நில உரிமை மாற்றம் என்று இரண்டு வகைகளிலே தகுதியுள்ள நிலங்கள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 1984 ஆம் ஆண்டு கேட்ட கேள்விக்கு விடை கிடைக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அது நீர்நிலைகளாக இருந்தாலோ, ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களாக இருந்தாலோ இடம் தேர்வு செய்யப்படாமல் இருக்கும். புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புண்ணியத்தில் அரசு உறுதிமொழிக் குழுவிலே நானும் தலைவராக இருந்திருக்கிறேன். ஆகவே, இந்தச் சபையிலே கொடுக்கப்படுகிற உறுதிமொழிகளை எல்லாம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு நிறைவேற்றிக்கொண்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்ன உறுதிமொழி குறித்து என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வருவாரேயானால், நிச்சயமாக, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அதை நிறைவேற்றித் தரும் என்பதை

2017 ஜூலை 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், நிலமாற்றம், நில உரிமை மாற்றத்தின் மூலமாக ஒவ்வொரு அரசுத் துறைக்கும் எவ்வளவு நிலங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்ற புள்ளிவிவரங்கள் என்னிடத்திலே இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தேவைப்பட்டால், அந்தப் புள்ளிவிவரங்களை தனிப்பட்ட முறையிலும் கொடுப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.

திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைஞர் அவர்களின் ஆட்சியில், லால்குடியிலே புதிய வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அரசாணை வெளியிடப்பட்டது. அப்போது லால்குடியிலே இடம் கிடைக்கவில்லை என்று சொன்னவுடன், எனக்குச் சொந்தமான கிட்டத்தட்ட ரூ.3 கோடி மதிப்புள்ள 51 சென்ட் நிலத்தை அரசுக்கு இலவசமாக அன்றைக்கு வழங்கினேன். ஆனால், இதுவரை அந்தக் கட்டடம் அங்கே கட்டப்படவில்லை. இப்போது நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்கு இடம் தேடிக்கொண்டிருக்கிறார்கள். ஒன்று, நீதிமன்றக் கட்டடத்தையாவது அங்கு கட்டுங்கள்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. கே.என். நேரு: இல்லையென்றால் வட்டாட்சியர் அலுவலகமாவது கட்டுங்கள். 1989 ஆம் ஆண்டு தேர்தலின்போது லால்குடியில் 12,000 வாக்காளர்கள் இருந்தார்கள். இன்றைக்கு 40,000 வாக்காளர்கள் இருக்கக்கூடிய பெரிய நகரமாக மாறியிருக்கிறது. எனவே, தாலுகா அலுவலகத்தில், நீதிமன்றமும் இணைந்திருப்பதால் இட நெருக்கடி ஏற்பட்டு, மிகவும் மோசமாக இருக்கிறது. நான் தந்த இடம் தேவையில்லை என்று சொன்னால்கூட, வேறு இடத்தையாவது தேர்வு செய்து உடனடியாக புதிய

வட்டாட்சியர் அலுவலகத்தை கட்டித்தர வேண்டுமென்ற கோரிக்கையையும் வைத்து, நீதிமன்றம் கட்டுவதற்கும் இடம் தேடிக்கொண்டிருக்கிறார்கள், அதற்கும் இடம் தேர்வு செய்து, புதிய வட்டாட்சியர் அலுவலகத்தை கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அரசாணையும் வெளியிடப்பட்டதாகத் தெரிவித்தார். இடம் தேர்வு செய்யும்போது சரியான இடம் கிடைக்கவில்லை என்று தன்னுடைய சொந்த நிலத்தைத் தந்ததாகவும் தெரிவித்தார். பொதுவாக இந்த மாதிரி நேரங்களில் தங்களுடைய சொந்த நிலங்களைத் தரும்போது, அது மக்கள் எல்லோரும் வந்து செல்கிற ஒரு மையப் பகுதியாக இருக்கிறதா என்பதை ஆய்வு செய்கிற ஒரு நிலை இருக்கிறது. பொதுவாக, மாவட்ட நிருவாகம் எந்த நிலத்தை பரிந்துரை செய்கிறதோ அந்த இடத்தில்தான் வட்டாட்சியர் அலுவலகம் கட்டப்பட்டு வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்திருக்கிற நிலம் ஒரு வேளை எல்லோரும் வந்து செல்வதற்கு வசதியாக இருக்கிறதா என்பதை ஆய்வு செய்து நிச்சயமாக கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்னாள் அமைச்சராக இருந்தவர். பல வளர்ச்சித் திட்டங்களுக்கு நிலம் தந்திருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அவையில் தெரிவித்தார்கள். அது பாராட்டுக்குரியதாகும். ஆனால், அந்த நிலம் கட்டடம் கட்டுவதற்கு ஏற்ற வகையில் இருக்கின்றதா என பார்க்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் நிலம் கொடுத்தார் என்பதற்காக கட்டடத்தை கட்டிவிட முடியாது. மாவட்ட நிருவாகத்தினுடைய பரிந்துரையை ஏற்றுதான் செய்யமுடியும். அந்த வகையில் மீண்டும் பரிசீலனை செய்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 209, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.